# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேணி பழனி

தேதி 7.9.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில், இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்க வேண்டுமென்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

**ஆயுர்வேத தினம்** ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்று, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

5 நாள் சர்வதேச அறிவியல் மற்றும் செயல்முறை மாநாடு, இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் தொடங்கியது.

## சிபி ராதாகிருஷ்ணன்

போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில், இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்க வேண்டுமென்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார். குவஹாத்தி பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவர்களிடையே உரையாற்றிய அவர், போதை பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்க பாடுபடுவோம் என்ற உறுதி மொழியை வலியுறுத்தினார். மேலும், ஒரு கல்வி நிறுவனத்தின் மதிப்பு வெறும் தரவரிசைகளில் மட்டுமில்லை, மாறாக சமூகத்தை மாற்றி அமைக்கும் அதன் திறனில் தான் உள்ளது என்றுறார். கல்வி, இலக்கியம், அறிவியல் மற்றும் அறிவுசார் முயற்சிகள் ஆகிய துறைகளில், அப்பல்கலைக் கழகம் பெரும் பங்காற்றி உள்ளது என்றும் கூறினார். தொடர்ந்து பேசிய அவர், சமூகத்தின் மாறி வரும் தேவைகளுக்கு ஏற்ப உயர் கல்விகளை, மேலும் புதுமையானதாகவும், பதில் அளிக்க கூடியதாகவும் மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து

எடுத்துரைத்தார். முன்னதாக, நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு சென்ற குடியரசு துணைத் தலைவருக்கு, என்சிசி மற்றும் என்எஸ்எஸ் உறுப்பினர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. குவஹாத்தி பல்கலைக் கழகத்தில், 110 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களுக்கு, திரு சிபி ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டினார்.

## மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். வதோதராவில், 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டி, அவற்றை நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார். மேலும் சுமார் 20-ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கும், அதிக மதிப்பிலான மேற்கு பிரத்யேக சரக்கு வழி தடத்தின், 3 முக்கிய பிரிவுகளையும் அவர் நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார். மேலும், வதோதரா மற்றும் டாண்டா சாலைக்கும் இடையே, ஒரு புதிய ரயில் சேவையையும் பிரதமர் கொடி அசைத்து துவக்கி வைக்க உள்ளார். இந்த புதிய ரயில் பாதை, அலி ராஜ்பூரில் தொலைதூர மற்றும் பழங்குடியின பகுதிகளை, தேசிய ரயில் கட்டமைப்புடன் இணைக்கும். தொடர்ந்து சுமார் ஆயிரத்து 789 கோடி ரூபாய் மதிப்பிலான, 3 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கும், அவர் அடிக்கல் நாட்ட உள்ளார். பின்னர் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, பிரதமர் உரையாற்றுகிறார். மகாராஷ்டிராவில், மும்பையில் நடைபெறும் குலோபல் Fintech Fest-2026-ஐ பிரதமர் தொடக்கி வைத்து உரையாற்றுவார். இந்நிகழ்ச்சியின் கருப்பொருள், **தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல்: முகவர் வழி செயற்கை நுண்ணறிவு, டோக்கனைசேஷன், குவாண்டம்-அனைவரையும் உள்ளடக்கிய, நம்பகமான இணைக்கப்பட்ட உலகளாவிய அமைப்புகள்** என்பதாகும்.

## ஆயுஷ் தினம்

**ஆயுர்வேத தினம்** ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்றும், ஆயுர்வேதம் குறித்த ஆதார அடிப்படையிலான தகவல்கள் நாடு முழுவதும்

உள்ள ஒவ்வொரு வீடு, பள்ளி, கல்லூரி மற்றும் பணியிடத்தையும் சென்றடைய வேண்டும் என்றும் மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

இதுகுறித்த கூடுதல் தகவல்கள்...........

(வாய்ஸ்)

ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் 11-ஆவது ஆயுர்வேத தினம் வரும் 23-ஆம் தேதி நாக்பூரில் சிறப்பாக கொண்டாடப்படும் என அறிவித்தார். இந்த ஆண்டின் கருப்பொருள் **ஆரோக்கியமான நாளைய தினத்திற்கான ஆயுர்வேதம்** என்பதாகும். ஆயுர்வேத தினம் என்பது இந்தியாவின் வளமான பாரம்பரியத்தை கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் மட்டுமல்ல, அது எதிர்காலத்தின் சுகாதார தேவைகள் மற்றும் சாத்தியக் கூறுகளுடன் இணைப்பதற்கான, ஒரு வாய்ப்பும் கூட என்று அவர் வலியுறுத்தினார். ஆரோக்கியமான இந்தியாவையும், எதிர்காலத்தையும் உருவாக்குவதில் ஆயுர்வேதம் ஒரு முக்கிய தூணாக மாற வேண்டும் என்று கூறி, வரும் 11-ஆம் தேதி நடைபெற உள்ள பிரச்சாரத்தில், நாடு தழுவிய பங்கேற்புக்கும் அவர் அழைப்பு விடுத்தார். தடுப்பு சுகாதார பராமரிப்பு, ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள், ஊட்டச்சத்து, நல் வாழ்வு மற்றும் முழுமையான சுகாதார பராமரிப்பு ஆகியவற்றின் மீது, உலகம் அதிக அளவில் கவனம் செலுத்தி வருவதாக சுட்டிக்காட்டிய அவர், அனைத்து துறைகளிலும் இந்தியா ஒரு வளமான பாரம்பரியத்தையும், பரந்த அனுபவத்தையும் கொண்டிருப்பதாக கூறினார்.

## ஜெய்சங்கர்

இந்தியா-லக்ஸம்பர்க் நாடுகளிடையே, நம்பிக்கையான நட்புறவு நிலவுவதாக, மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று பிற்பகல், லக்ஸம்பர்க் துணை பிரதமரும், வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சருமான திரு சேவியர் பெட்டலை சந்தித்து உரையாடிய திரு ஜெய்சங்கர், திரு பெட்டல், தனது பொருளாதார அமைச்சருடன் மேற்கொண்ட இந்த

சந்திப்பு இந்தியாவிற்கும், லக்ஸம்பருக்கும் இடையிலான வளர்ந்து வரும் கூட்டாண்மையை, எடுத்து காட்டுகிறது என்று கூறினார். இந்த ஆண்டின் தொடக்கத்தில், லக்சம்பர்க் சென்று இருந்ததை நினைவு கூர்ந்த டாக்டர் ஜெய்சங்கர் வர்த்தம், முதலீடு, நிதி ஒத்துழைப்பு ஆகியவை இந்த உறவின் ஆழத்தை பிரதிபலிப்பதாக கூறினார். மேலும், விண்வெளி, டிஜிட்டல் மற்றும் பசுமை தொழில் நுட்பங்களிலும், இரு தரப்பினரும் ஒத்துழைப்பை நாடி வருவதாகவும், அவர் அடிக் கோடிட்டு காட்டினார். ஐரோப்பா உடனான விநியோகச் சங்கிலி, மீள்தன்மை மற்றும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், ஆகியவற்றிற்கு வலுவான ஆதரவு அளித்ததற்கு லக்ஸம்பர்க் வெளியுறவு துறை அமைச்சருக்கு, டாக்டர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்தார். 3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள, லக்ஸம்பர்க் துணைப் பிரதமர் இந்தியா உடன் நம்பிக்கையான உறவை லக்ஸம்பர்க் கொண்டுள்ளது என்று கூறினார்.

## அமித் □ ா

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பனாஜியில் இன்று நடைபெற்ற, மேற்கு மண்டல கவுன்சிலின் 28-ஆவது கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இந்த கவுன்சிலில் கோவா, குஜராத், மற்றும் மகாராஷ்டிராவுடன், தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன்-டையூ ஆகிய யூனியன் பிரதேசங்களும் அடங்கும். கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த், குஜராத் முதலமைச்சர், திரு பூபேந்திர பட்டேல் மற்றும் மகாராஷ்டிரா முதலமைச்சர், திரு தேவேந்திர ஃபட்நவீஸ் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகளும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பொதுவான பிரச்சனைகள், கூட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து, இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. தலேகாவோவில் உள்ள, டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி உள்ளரங்கு மைதானத்தில் நடைபெற்ற விழாவில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, கோவா காவல் துறைக்கு, மதிப்புமிக்க ராஷ்டிரபதி கா

நிஷான் எனும் குடியரசு தலைவர் காவல் வண்ணத்தை வழங்கினார். ஒரு காவல் படைக்கு வழங்கப்படும், மிக உயர்ந்த கவுரவங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. இந்த கவுரவம், கோவா காவல் துறையின் அர்ப்பணிப்பு மிக்க சேவை, ஒழுக்கம், மற்றும் மாநில மக்களுக்கு அவர்கள் ஆற்றும் உறுதிப்பாட்டை அங்கீகரிக்கிறது.

## புதுச்சேரி-பல்கலைக் கழகம்

சுற்றுலாக் கல்வித் துறையையும், தொழில் துறையையும் இணைத்தல் குறித்து, இந்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கண்ணோட்டங்கள் என்ற தலைப்பிலான, 5 நாள் சர்வதேச அறிவியல் மற்றும் செயல்முறை மாநாடு, இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் தொடங்கியது.ஐரோப்பிய ஒன்றிய நிதி உதவி பெறும் திட்டத்தின் கீழ், சுற்றுலா ஆய்வுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாடு, இந்தியா மற்றும் ஐரோப்பாவில் உள்ள சுற்றுலா கல்வித் துறைக்கும், தொழில் துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே, இம்மாநாட்டின் நோக்கமாகும். ஒடிசாவில் ராவன்ஷா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பேராசிரியர் அர்கா குமார் தாஸ் மொஹபத்ரா, இம்மாநாட்டை தொடக்கி வைத்தார். புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், பேராசிரியர் பிரகாஷ் பாபு நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்..........

(வாய்ஸ்)

இம்மாநாட்டில் கர்நாடக மத்திய பல்கலைக்கழக துணை வேந்தர், பேராசிரியர் Battu சத்தியநாராயணா, சேதுபால் பாலிடெக்னிக் நிறுவனத்தின் துணை தலைவர் பேராசிரியர் லூயிசா ககிகா கார்வாலோ, விட்சன் பயன்பாட்டு அறிவியல் பல்கலைக் கழகத்தின், முன்னணி ஆராய்ச்சியாளர், பேராசிரியர் அகிதா லிவினா, சிஐஐ புதுச்சேரி மாநில மன்ற தலைவர் திரு நடராஜன் மற்றும் இந்தியா, ஐரோப்பாவைச் சேர்ந்த, கல்வித் துறை வல்லுனர்களும் பங்கேற்றனர். இம்மாநாட்டில், குழு மற்றும் வட்ட மேசை விவாதங்கள், ஆய்வுக் கருத்தரங்கம், சுவரொட்டி

வடிவமைப்பு மற்றும் ஆய்வறிக்கை சமர்பிப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், சுமார் 100 ஆய்வுக் கட்டுரைகள், பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 11-ஆம் தேதி வரை நடைபெறும் இம்மாநாடு சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் சேவை ஆய்வுகளில், நிலைத் தன்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தமிழகம்

கட்சிப் பாகுபாடுகளை பொருட்படுத்தாமல், சட்டத்தின் முன் ஒவ்வொரு தனிநபரும், சமமாக நடத்தப்படுவார் என்று தமிழக முதலமைச்சர் திரு சி ஜோசப் விஜய் கூறி உள்ளார். மாநில சட்டமன்றத்தில், இன்று, மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு குறித்த தமது பதிலில், மாநிலத்தில் ஊழலுக்கு சகிப்புத் தன்மைக்கு இடமில்லை என்றும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு, முன்னுரிமை அளித்து கையாளப்படும் என்றும் அவர் கூறினார். அரசு அலுவலகங்களில் ஊழல் தடுப்பு கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும், போதையில்லா தமிழகத்தை உருவாக்குவதே தமது அரசின் நோக்கம் என்றும் திரு விஜய் அடிக்கோடிட்டுக் காட்டினார். மேலும், கருத்துரிமை சுதந்திரம் என்ற பெயரில், பெண்கள் மீதான தரக்குறைவான விமர்சனங்களில் ஈடுபட வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்த அவர், தனிப்பட்ட முறையில் அவர்கள் மீது அவதூறு பேசினால், சட்டம் தன் கடமையை செய்யும் என்று உறுதி அளித்தார். தொடர்ந்து திமுக உறுப்பினர்கள் கோஷம் எழுப்பி தாங்கள் பேசுவதற்கு, வாய்ப்பளிக்க வேண்டும் என்று சட்டப்பேரவை தலைவரை கேட்டுக் கொண்டனர். முதலமைச்சரின் பதிலுரைக்கு பின்னர் வாய்ப்பு வழங்கப்படும் என்று சட்டப்பேரவை தலைவர் கூறியதும், சிறிது நேரம் அவையில், அமளி ஏற்பட்டதைத் தொடர்ந்து, தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் திமுக-வினர் அவையில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

பியூஷ்கோயல்

இந்திய மருத்துவ சுற்றுலாவானது, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும். வேலை வாய்ப்பை உருவாக்கவும், சர்வதேச நன்மதிப்பை பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்றும், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர், திரு பியூஷ்கோயல் கூறினார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சஞ்சீவினி-2026 என்ற சுகாதார மற்றும் நல்வாழ்வுக் கண்காட்சியில் உரையாற்றிய அவர், வெளிப்படைத் தன்மை மற்றும் நோயாளிகளுக்கு, சிறந்த கவனிப்பின் மூலம் உலகளாவிய சுகாதார சேவைக்கு, நாடு ஒரு உயர்தர அளவுகோலை நிறுவ வேண்டும் என்று வலியுறுத்தினார். கடந்த 7 ஆண்டுகளில், 35 லட்சம் நோயாளிகள் இந்திய சுகாதார சேவைகளால் பயன் அடைந்துள்ளனர் என்று, பெருமிதம் தெரிவித்த அவர், ஆண்டுதோறும் 10 மில்லியனுக்கும் அதிகமான, சர்வதேச நோயாளிகளுக்கு, சேவை செய்யும் தனது இலக்கை நாடு விரிவுபடுத்த வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார். முழு செயல்முறையையும், தடையற்றதாக மாற்றுவதற்கும், இந்தியா ஒரு உலகத் தரம் வாய்ந்த, மருத்துவ பயணச் சூழல் அமைப்பைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கும், தொழில் துறை, ஒரு கூட்டாளியாக இணைந்து செயல்பட வேண்டும் என்று கூறினார்.
Vas/ Sen /Rp/7.9.2026

மீண்டும் தலைப்புச் செய்திகள்

போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில், இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்க வேண்டுமென்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

**ஆயுர்வேத தினம்** ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்று, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

5 நாள் சர்வதேச அறிவியல் மற்றும் செயல்முறை மாநாடு, இன்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் தொடங்கியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------------